DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.40/2016 |
| Deposition of Witness for | : | P.W. 11 |
| Name | : | **செல்வராஜ்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1, , 5, 10, 14 ஆஜர். 13வது எதிரி இறப்பு. 2, 3, 4, 6, 7, 8, 9, 11, 12, 15, 16 எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3, 4, 6, 7, 8, 9, 11, 13, 15, 16 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.08.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் சிங்காரப்பேட்டை காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.01.2015ம் தேதி நான் சிவகங்கை மாவட்டம் பூவந்தி வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது எனது பூவந்தி வட்ட காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பழையனூர் காவல்நிலைய உ தவி ஆய்வாளர் திரு.முத்துக்கிருஷ்ணன் என்பவர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கீழ ராங்கியத்தை சேர்ந்த முருகானந்தம் என்பவர் 25.01.2015ம் தேதி காலை 11.00 மணிக்கு சென்று அவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று மதியம் 14.00 மணிக்கு நிலையம்

வந்து நிலையக்குற்ற எண்.11/2015 பிரிவுகள் 147, 148, 294பி, 323, 336, 324, 307 இதச மற்றும் பிரிவு 3 of TNPPDL Act -ன் படி வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்ததை பெற்றுக்கொண்டு உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தை அடையாளம் காட்ட அன்று மாலை 17.00 மணிக்கு ஆஜர் சாட்சிகள் கணேசன் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6** ஆகும்.

2. மேலும் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் உடைந்த வீட்டின் 4 ஓட்டுத்துண்டுகளை கைப்பற்றுதல் மகஜர் மூலம் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது. பின்பு சாட்சிகள் கணேசன், ஜெயக்குமார், ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சாட்சிகள் முருகானந்தம், மாரி, போஸ், பொன்னுமுத்து, முனியம்மாள், சிவசூரியன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. சம்பவயிடத்தை பார்வையிட்டதிலிருந்தும் சாட்சிகள் விசாரணையிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் கிருஷ்ணன், செந்தில்வேல், பூவலிங்கம் என்ற முத்துலிங்கம், தனபாலன், சண்முகம், பாலாஜி, ரவிக்குமார், சேங்கைபிள்ளை, சாந்தா, ராமநாதன், சக்திவேல், சிவக்குமார், பாலமுருகன், லிங்கம், ஈஸ்வரி, நாகராஜன் மற்றும் ஜெயமணி ஆகியோர்கள் உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் முன் ஜாமின் பெற்று பிணையில் சென்றுள்ளார்கள்.

4. பின்பு கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.7 ஆகும். பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி முருகானந்தம் என்பவருக்கு சிகிச்சையளித்த சான்று வழங்கிய டாக்டர் கலியரத்தினம் ராஜாஜி அரசு மருத்துவமனை என்பவரை

விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அடிப்படையிலும் எனது விசாரணையின் அடிப்படையிலும் இவ்வழக்கு சம்பவத்தில் ஆதிலிங்கம், பாலாஜி, பாண்டி, செல்வமணி ஆகியோர்கள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரியவந்ததால் அவர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கி தனிஅறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த **தனியறிக்கை அ.த.சா.ஆ.8** ஆகும். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 294பி, 323, 336, 324, 307 இதச மற்றும் பிரிவு 3 of TNPPDL Act -ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தேன். என்னுடைய விசாரணையின்போது அ.சா.5 முனியம்மாள் என்பவர் வழக்கு சம்பவம் பற்றி வாக்குமூலம் அளித்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. இந்த வழக்கு குற்ற எண்.10/2015ன் எதிர் வழக்கு என்றால் சரிதான். என்னுடைய விசாரணையின்போது சாட்சிகள் யாரேனும் எதிரிகளுக்கு காயம்பட்டதாக வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார்களா என்றால் அவ்வாறு கூறவில்லை. புகார்தாரர் தரப்பினர் திமுக அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் எதிரிகள் அதிமுக அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். முருகானந்தம் மனைவி மகாலட்சுமி அந்த சமயத்தில் நடந்த பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட்டு 2ம் எதிரி செந்தில்வேல் மனைவி கௌசல்யா வெற்றி பெற்றார் என்றால் சரிதான்.

2. இரண்டு தரப்பினர்களுக்கும் தண்டீஸ்வரர் கோவிலில் கல்வெட்டு வைப்பதற்காக பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். சமாதானகூட்டத்தில் புகார்தாரர் தரப்பினர் கையெழுத்து இட்டார்களா என்றால் கையெழுத்திடவில்லை. என்னுடைய விசாரணையில் புகாரை யார் எழுதினார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் அவர் சொல்ல சொல்ல உடன் இருந்தவர் எழுதிக்கொடுத்தார். அவ்வாறு எழுதிய நபர் யாரென்று தெரிந்துகொண்டேனா என்றால் அரசு மருத்துவமனையில் அவருடன் சிகிச்சைக்கு வந்த படித்த எழுத தெரிந்த ஒருவரிடம் சொல்ல சொல்ல எழுதியுள்ளார். அவர் யாரென்று

விசாரித்தேனா என்றால் ஞாபகமில்லை.

3. நான் முருகானந்தத்தை எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் 25.01.2015ம் தேதி இரவு சுமார் 8.00 மணிக்கு மேல் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். முருகானந்தம் காயம்பட்டு மயக்கமாகி தமக்கு 3 நாட்கள் கழித்துதான் மயக்கம் தெளிந்தது என்று கூறியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது சிசிக்சையில் இருந்தவரிடம் வாக்குமூலம் பெற்றேன். அதனால் முருகானந்தத்தை விசாரித்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணனும் அவருடைய மகனும் அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. கிருஷ்ணன் முருகானந்தத்தை வலது காலில் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கிருஷ்ணன் முருகானந்தத்தை தாக்கியபோது அவர் விலகிச்சென்ற போது அது இடது காலில் பட்டு காயம் ஏற்பட்டதாக கூறியிருக்கிறார். முருகானந்தத்திற்கு வலது காலில் காயம் இல்லை என்று சொன்னால் சரிதான். எதிரி ராமநாதன் தன் கையில் வைத்திருந்த கம்பால் தங்கை முனியம்மாள் மீது எரிந்ததில் வலது கையில் வீக்ககாயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளாரா என்றால் காயம் என்று தான் கூறுகிறார் உடம்பில் எந்த பகுதியில் காயம் என்று கூறவில்லை.

5. உடைந்த ஓடுகள் பொதுச்சொத்து கிடையாது தனிநபருக்கு சொந்தமான வீட்டின் ஓடுகள் என்றால் சரியல்ல, அது பொது சொத்து தான். சம்பவம் நடந்த இடத்தை புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. சேதமதிப்பு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ராஜேஸ்வரி, சண்முகம், ஜெயமணி, செல்வகணபதி, சிவரஞ்சனி ஆகியோர்கள் காயம்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்ட விபரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். முருகானந்தத்தை தவிர வேறு யாரும் காயம்பட்டு மருத்துவசிகிச்சை எடுத்துக்கொண்டதாக தெரிந்துகொண்டேனா என்றால்

இவ்வழக்கில் முருகானந்தம் மற்றும் அவருடைய சகோதரி பொ்ன்னுமுத்து மற்றும் முனியம்மாள் ஆகியோர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால் ( Non MLC) என்பதால் காயச்சான்றிதழ் பெறவில்லை. அவ்வாறு பொன்னுமுத்து மற்றும் முனியம்மாள் ஆகியோர்களுக்கு காயம் ஏற்படவே இல்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு காயம் ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் மேற்குறிப்பிட்ட தனியார் மருத்துவமனையின் மருத்துவர்கள் யாரையாவது விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. பொ்ன்னுமுத்து மற்றும் முனியம்மாள் ஆகியோர் என்னுடைய விசாரணையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரத்தை கூறியுள்ளார்களா என்றால் வாக்குமூலத்தில் காயம்பட்டதாக மட்டுமே கூறியிருக்கிறார்கள், தனியார் மருத்துவமனையில் காயத்திற்கு சிகிச்சை பெற்ற விபரத்தை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேன்.

7. இந்த வழக்கில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் விராதனூர் கண்மாயிலிருந்து தண்ணீரை விலைக்கு வாங்கி ராங்கியம் கிராமத்திற்கு கொண்டு வந்த விபரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான், இது பொதுவான நடைமுறை ஆகும். மருத்துவமனையிலிருந்த தகவல் வருவதற்கு முன்பு காவல்நிலையத்திற்கு சம்பவம் பற்றி தகவல் வந்ததா என்றால் வரவில்லை. சாட்சி முருகானந்தத்திற்கு கல்லால் எரிந்ததில் இடுப்பில் ஊமைக்காயம் என்று அ.சா.3 மாரி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பொதுவாக எதிரிகள் கல்லால் எரிந்ததாக கூறியுள்ளார். அ.சா.3 மாரி தனக்கு எதிரிகள் கல்லால் எரிந்ததில் இடுப்பில் ஊமைக்காயம் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறாரா என்றால் சொல்லவில்லை.

8. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் பார்வை மகஜர் , அத்தாட்சி மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றும்

புகார்தாரர் தரப்பினர் எதிரிகளை தாக்கி காயப்படுத்தி எதிரிகள் தரப்பில் கொடுத்த வழக்கிலிருந்து காப்பாற்றி கொள்வதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அந்த பொய் புகாரை நான் சரிவர புலன் விசாரணை செய்யாமலும் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமலும் நான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.08.13 16:53:06 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை..**